DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-68/2020

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.இந்துராணி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

24.02.2026 – 03.30 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தத்தங்குடி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2, 3 ஐ எனக்கு தெரியும்.

2. சுளங்கள் ஊருக்கு தெற்கே எங்களுக்கு சொந்தமான புஞ்சை நிலம் உள்ளது. அந்த இடத்தில் நெற்கதிர் விளைத்திருந்தோம். அதில் இருந்த தண்ணீரை மோட்டார் வைத்து வெளியே இறைத்து வயலில் காய வைத்திருந்தோம். எனது கணவர் பஞ்சவர்ணம் வாலிநோக்கம் கடைக்கு சென்றுவிட்டார். என்னை வயலை பார்த்து விட்டு வருமாறு சொன்னதன் பேரில் சுமார் 6 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் சம்பவ தினத்தன்று நான் வயலுக்கு சென்று பார்த்தபோது எனது மச்சான் தீன்முகமது வயலில் தண்ணீர் நின்று கொண்டிருந்தது.

3. அந்த தண்ணீரை எனது வயலில் வெட்டிவிட்டார். அதை பார்த்து நான் ஏன் காய்ந்த நெற்கதிர் வயலில் வெட்டி விட்டீர்கள் என்று கேட்டதற்கு தீன்முகம்மது அடிடா என்று சொன்னவுடன் அஜ்மல்கான் என்னை நொம்மாள என ஆபாசமான வார்த்தையால் திட்டி கம்பால் மண்டையில் அடித்தார். நான் அந்த கம்பை பிடித்தேன். எனது இடது கையில் அடிபட்டு எனது கை முறிந்து விட்டது. அத்தோடு நான் கீழே விழுந்துவிட்டேன். அந்த நேரத்தில் எனது

கணவர் பஞ்சவர்ணம் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார். அதன்பின்பு எதிரி நூர்ஜகான் எனது தொண்டையில் காலை வைத்து மிதித்தார்.

4. அஜ்மல்கான் என் பிடறி முடியை இழுத்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். அதன்பிறகு எனது கணவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை அனுப்பி வைத்தார். நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அதன் பிறகு இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் கைரேகை வைத்தேன். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –**

எதிரிகள் ஆஜரில்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.24 00:19:31 +0000